புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com



ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன்

• திருவள்ளுவர் ஆண்டு 2055 • மே 23, 2024 • புரட்சி 24 • முழக்கம் 19 • விலை ரூ.3.00

# தீவட்டிப்பட்டி கலவரத்தில் காவல்துறை பாரபட்சம்! பாதிக்கப்பட்டவர்கள் மீதே பாயும் நடவடிக்கை

## உண்மை கண்டறியும் குழுவின் பரிந்துரைகள்



**சேலம் மாவட்டம் தீவட்டிப்பட்டி பெரிய மாரியம்மன் கோவில் திருவிழாவை ஒட்டி மே 2/2024 அன்று நடந்த சாதிய வன்முறைகளைத் தொடர்ந்து, முற்போக்கு, சனநாயக அமைப்புத் தோழர்கள் மே 11 ஆம் நாளன்று நேரடியாகச் சம்பவ இடத்திற்குச் சென்று நாச்சினாம்பட்டி ஆதிதிராவிடர் குடியிருப்பு மக்களையும், தீவட்டிப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த பிற்படுத்தப்பட்ட வகுப்பு மக்களையும், தீவட்டிப்பட்டி காவல் நிலைய ஆய்வாளர் (Investigation Officer – I.O.) திரு.ஞானசேகரன் அவர்களையும் சந்தித்து ஆய்வு நடத்தினர். அந்த ஆய்வின் அடிப்படையில் உண்மை அறியும் குழு அரசுக்கு முன்வைக்கும் பரிந்துரைகள்:**

• ஆதிதிராவிடர் பகுதியில் தேவையில்லாமல் பலர் மீது பொய் வழக்குகள் போடப்பட்டுள்ளன. அவை திரும்பப் பெறப்பட வேண்டும். எடுத்துக் காட்டாகப் பெருமாயி மகன் அருண்குமார் (வயது 23) , குணா ( 21 ) தா/பெ பழநியம்மாள் போன்ற பல அப்பாவி இளைஞர்கள் கலவரத்தில் காயம் அடைந்ததோடு ஆத்தூர் சிறையிலும் அடைக்கப் பட்டுள்ளனர்.

• காவல்துறை தாக்குதலால் காயம் பட்டு இருப்பவர்களுக்கு உரிய தரமான மருத்துவ சிகிச்சை அரசு பொறுப்பில் வழங்கப்பட வேண்டும்.

• காவல்துறைக் கண்காணிப்பை அதிகரிப்பதோடு, தொடர்ந்து இரவு நேரத்தில் வந்து ஆதிதிராவிட இளைஞர்களைக் கைது செய்து கொண்டு செல்லும் நடைமுறை உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

• தீவட்டிப்பட்டியில் அமைதி திரும்புவதற்கான அனைத்து நடவடிக்கைகளும். எடுக்கப்பட வேண்டும்.

• சக்தி மாரியம்மன் கோயில், தமிழ்நாடு அறநிலைத்துறையின் கீழ் இருந்தாலும் வன்னியர்கள் தங்களது ஆதிக்கத்தில் அதைக் கையகப்படுத்திக் கொண்டிருப்பது ஏற்கத் தக்கதல்ல. எனவே அறநிலையத் துறை இதில் தலையிட்டுக் கோயிலைத் தனது பொறுப்பின் கீழ் கொண்டுவர வேண்டும். மேலும் கோயில் நிர்வாகக் குழுவில் ஆதி திராவிட மக்களுக்கு உரிய பிரதிநித்துவம் தரப்பட வேண்டும்.

• சக்தி மாரியம்மன் கோயில் அறநிலையத் துறையின் கீழ்தான் உள்ளது என்பது பற்றிய அறிவிப்புப் பலகை, கோயிலின் எந்தப் பகுதியிலும் வைக்கப்படவில்லை. அது சரி செய்யப்பட வேண்டும்.

• சக்தி மாரியம்மன் கோயில் பூசாரி பெரும்பான்மைச் சமூகத்தைச் சார்ந்தவராக இருப்பதை மாற்றிச் சுழற்சி முறையில் அமைக்க வேண்டும்.

• தீவட்டிப் பட்டி அரசுயர் பள்ளியில் மாணவர்களிடையே கஞ்சா போன்ற போதைப் பொருள் பயன்பாடு அதிக அளவு இருப்பதாக மக்கள் புகார் தெரிவிக்கின்றனர். அதை முற்றிலும் ஒழித்துக்கட்டத் தீவிர நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

• இந்தக் கலவரத்தில் பாட்டாளி மக்கள் கட்சியைச் சார்ந்த ஆட்டையாம்பட்டி ஒன்றியச்செயலாளர் வெங்கடேசன் என்பவருக்கு மிக முக்கியப் பங்கு இருப்பதாகத் தெரிய வருகிறது. அவர் உடனடியாகக் கைது செய்யப்பட வேண்டும்.

• ஆதிதிராவிட சமுதாயத்திலுள்ள பெண்கள் பலருக்கு 100 நாள் வேலைதான் வாழ்வாதாரமாக உள்ளது. ஆனால் அவர்கள் வேலைக்குச் செல்வதற்கும் அஞ்சி வீடுகளிலேயே முடங்கிக் கிடக்கின்றனர். அவர்களிடைய நம்பிக்கையை ஏற்படுத்தும் நடவடிக்கைகளை அரசு உடனடியாக மேற்கொள்ள வேண்டும்.

• காவல்துறை பக்கச்சார்பாக நடந்து கொண்டுள்ளது மிகத்தெளிவாகத் தெரிகிறது. பெண்களையும், சிறுவர்களையும் கடுமையாகத் தாக்கிக் காயப்படுத்தி உள்ளனர். குறிப்பாக ஆதிதிராவிட வகுப்பைச் சேர்ந்த ராணி (38) க/பெ ராஜாமணி என்பவரைக் குளியலறையிலிருந்து இழுத்துக் கொண்டுவந்து தாக்கி உள்ளனர். இத்தகைய அராஜகச் செயலில் ஈடுபட்ட காவலரைக் கண்டறிந்து அவர் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

• சிசிடிவி காமிரா மற்றும் பாதிக்கப்பட்டவர்கள் தங்களது செல்பேசியில் எடுத்த படங்கள் ஆகியவற்றைப் பரிசீலித்துத் தவறு செய்த குற்றவாளிகள் மீது பக்கச் சார்பின்றி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.சிசிடிவி காமிராவில் ஒருவேளை படங்கள் இல்லாவிட்டால், அதற்குப் பொறுப்பாக உள்ள காவல் துறையினர் மீது நீதிமன்றத் தீர்ப்புகளின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

• பாதிக்கப்பட்ட ஆதிதிராவிடர்களுக்கு இழப்பீடு வழங்குவதோடு, தீக்கிரையாக்கப்பட்ட கடைகளுக்கும் நிவாரணம் வழங்கப்பட வேண்டும்.

• கோயில் விழாவினை எதிர்வரும் காலத்தில் அறநிலையத் துறையின் கண்காணிப்பின் கீழ் நடத்த வேண்டும்.

• ஆதிதிராவிடர் பகுதியில் இவ்வளவு கடுமையான பாதிப்பு இருந்தும், காவல்துறை அதன் அடிப்படையில் வழக்கு எதுவும் பதிவு செய்யாதது ஏற்கத் தக்கதல்ல. இனியாவது பாதிக்கப்பட்டவர்களிடமிருந்து புகார் பெற்று வழக்குத் தாக்கல் செய்ய வேண்டியது காவல்துறையின் கடமையாகும்.

• கடந்த சில ஆண்டுகளாகத் தொடர்ச்சியாகக் கோவில்களில் பட்டியலின மக்கள் தங்கள் வழிபாட்டு உரிமையை வலியுறுத்தும் போதெல்லாம், அந்தக் கோயில்கள் பூட்டப்படுவதும், சீல் இடுவதும்தான் நடைமுறையாக இருந்து வருகிறது. ஆதிக்க சாதிகளைச் சார்ந்தவர்களும் தாங்கள் வழிபாடு நடத்துவதற்கு வாய்ப்பில்லை என்றாலும் சரி, பட்டியலின மக்களை அனுமதிக்காமல் இருந்தால் போதும் என்ற அவர்களின் கருத்துக்கு அது ஏற்பளிப்பதாக ஆகிவிடுகிறது. எனவே இனி எந்த ஓர் அறநிலையத் துறை சார்ந்த கோயிலிலும், பொதுக் கோவில்களிலும் இதுபோன்ற பட்டியலின மக்களின் வழிபாட்டு உரிமை தடுக்கப்படும் போது அரசு வன்கொடுமைத்தடுப்புச் சட்டத்தைப் பயன்படுத்தி வழக்குகள் பதிவதோடு, அதற்குக் காரணமானவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

### கள ஆய்வில் பங்கெடுத்தோர்

• கொளத்தூர் மணி
தலைவர், திராவிடர் விடுதலைக் கழகம்

• கண.குறிஞ்சி
ஒருங்கிணைப்பாளர், சமூகநீதிக் கூட்டமைப்பு

• மருதுபாண்டியன், சோசலிச மையம்

• தமயந்தி
தமிழ்நாடு முற்போக்குப் பெண் வழக்கறிஞர்கள் சங்கம்

• வளர்மதி, SUMS

• மாரியப்பன், தமிழ்த்தேச மக்கள் முன்னணி

• கோ.சீ.மணி

• மூர்த்தி
தலைவர், நல்வழிக்கழகம்

• அருண்சோரி, க.க. மா-லெ-மா

• கண்ணன்

# ஜி.ஆர்.சாமிநாதனின் மூடத்தனமான தீர்ப்பு

அக்ரஹாரத்தில் பார்ப்பனர்கள் சாப்பிட்டு போட்ட எச்சில் இலையில் பிற ஜாதியினர் உருண்டு தரிசனம் செய்யும் முறையை கடந்த 2015ஆம் ஆண்டு மதுரை உயர்நீதிமன்ற கிளை தடை செய்திருந்தது..

தற்போது இந்த சடங்கு முறைக்கு விதிக்கப்பட்ட தடையை நீக்கி உத்தரவிட்டிருக்கிறார் மதுரை உயர்நீதிமன்ற நீதிபதி ஜி.ஆர்.சாமிநாதன். இந்த சடங்கு அடிப்படை உரிமை என்றும் கூறியுள்ளார். ஏற்கனவே கர்நாடக அரசும் எச்சில் இலையில் உருண்டு தரிசனம் செய்யும் முறைக்கு தடை விதித்திருந்தது. இப்போது இந்த மூடத்தனம் தமிழ்நாட்டில் உயிர்ப்பெற்று வருகிறது.

இந்திய அரசியல் சட்டம் ஒவ்வொரு குடிமகனுக்கும் அறிவியல் மனப்பான்மையை வளர்க்க வேண்டும் என்று கூறுகிறது. அது நீதிபதிகளுக்கு தெரிவதில்லை.

சுகாதார உரிமையை விட பக்தி உரிமை தான் முக்கியமானது என்று நீதிபதிகள் கருதுகிறார்களா? என்ற கேள்வியும் எழுகிறது. வாழை இலையில் எச்சில் செல்கிற போது அதில் ஒரு ரசாயனம் உருவாகி அந்த சக்தியில் அதிர்வலைகள் ஏற்பட்டு மனித சிந்தனையை மாற்றி அமைக்கிறது என்று இவர்கள் அறிவியல் விளக்கத்தை கூறினாலும் வியப்பதற்கு இல்லை. சனாதனம் இப்படி எல்லாம் நாட்டை பாழ்படுத்திக் கொண்டிருக்கிறது.

**– விடுதலை இராசேந்திரன் முகநூல் பதிவு**

தலையங்கம்

# உழைக்கும் பெண்களை இழிவுபடுத்தும் மோடி!

மக்களவைத் தேர்தல் அறிவிக்கப்பட்ட நாளில் இருந்தே மிகுந்த பதற்றத்தோடு காணப்படுகிறார் நரேந்திர மோடி. மீண்டும் ஆட்சிக்கு வருவோமா? இல்லையா? என்ற பதற்றத்தில், அவர் உதிர்க்கும் வார்த்தைகள் யாவும் உச்சபட்ச வெறுப்புணர்வை வெளிக்காட்டுகின்றன. இசுலாமியர்கள் குறித்து நாடெங்கும் அவதூறாகப் பேசிவிட்டு, கடைசியில் இல்லை என்று மழுப்பிவிட்டார். காங்கிரஸ் – திமுக – ஆம் ஆத்மி – திரிணாமுல் காங்கிரஸ் உள்ளிட்ட அரசியல் கட்சிகள் குறித்து மோடியும் பாஜகவினரும் பேசும் பேச்சுக்கள் அநாகரீகத்தின் உச்சமாய் இருக்கின்றன. வாக்கு அரசியலுக்காக இவ்வாறு பேசுகிறார் என்று வைத்துக்கொண்டால் கூட, வாக்களிக்கும் மக்களையே தரம் தாழ்த்திப் பேசும் அளவுக்கு தற்போது எல்லை மீறிச் சென்றுவிட்டார் மோடி.

சில மாநிலங்களில் மகளிருக்கு கட்டணமில்லாமல் பேருந்துப் பயணம் வழங்கப்படுவதால், மெட்ரோ ரயில்களில் பயணிகளின் எண்ணிக்கை பாதியாகக் குறைந்துவிட்டது என்று மோடி கூறியிருக்கிறார். மகளிருக்கான கட்டணமில்லா பேருந்துப் பயணத் திட்டம் இந்தியாவிலேயே முதன்முறையாக தமிழ்நாட்டில்தான் அமல்படுத்தப்பட்டது. பொருளாதார ரீதியாக இந்தத் திட்டம் ஏற்படுத்தியிருக்கிற தாக்கம் என்ன என்பதற்கு ஏராளமான தரவுகள் உள்ளன. இந்த விடியல் பயணத் திட்டத்தால் பயன்பெறும் பெண்களின் எண்ணிக்கை நாள் ஒன்றுக்கு 55 லட்சம் பேர். சின்னஞ்சிறு கிராமங்களில் இருந்து அருகே உள்ள நகரங்களுக்கு வேலைக்குச் செல்லும் பெண்கள், காய்கறி விற்கும் பெண்கள் என பலதரப்பட்ட பெண்கள் இத்திட்டத்தால் மிகப்பெரிய பலனை அனுபவிக்கிறார்கள்.

மொத்தமாக இதுவரை 468 கோடிமுறை பெண்கள் கட்டணமில்லாமல் பயணம் செய்துள்ளனர். இவர்களில் சுமார் 80% பேர் தாழ்த்தப்பட்ட மற்றும் பிற்படுத்தப்பட்ட சமூகங்களைச் சேர்ந்தவர்கள். இப்பெண்கள் மாதந்தோறும் ரூ.541 முதல் ரூ.1,283 வரை சேமிக்கிறார்கள் என்றும் ஆய்வில் தெரிய வந்துள்ளது. இந்த சேமிப்புத்தொகை மறைமுகமாக கிராமப்புற பொருளாதாரத்தைத் தூண்டி, விலைவாசியை கட்டுக்குள் வைக்க உதவுகிறது என்றும் ஆய்வாளர்கள் கூறுகின்றனர். ஆனால் இத்திட்டத்தால் மெட்ரோ ரயில் பயணிகளின் எண்ணிக்கை கணிசமாகக் குறைந்திருப்பதாகக் கூறியிருக்கிறார் பிரதமர் மோடி.

இந்தியாவில் தற்போது தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா, டெல்லி, பஞ்சாப் ஆகிய மாநிலங்களில் கட்டணமில்லா பேருந்துப் பயணத் திட்டம் அமலில் உள்ளது. இவை எல்லாமே எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்கள். மெட்ரோ ரயில் திட்டம் பயன்பாட்டில் இருப்பதோ 15 நகரங்களில் மட்டுமே. அதில் கட்டணமில்லா பேருந்துப் பயணம் செயல்பாட்டில் இருப்பதோ சென்னை, பெங்களூரு, ஹைதராபாத், டெல்லி ஆகிய நகரங்கள் மட்டுமே. அதேசமயம், இந்த நகரங்களில் மெட்ரோ ரயில் பயணிகளின் எண்ணிக்கை ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்துக்கொண்டுதான் இருக்கிறது. சென்னை மெட்ரோ ரயிலில் மாதாந்திர பயணிகள் எண்ணிக்கை சராசரியாக 3 லட்சமாக உள்ளது.

எந்தவிதமான தரவுகளும் இல்லாமல், மனம்போகிற போக்கில் அவதூறுகளை, உண்மைக்குப் புறம்பான செய்திகளை அள்ளிவீசுவது 10 ஆண்டுகளாக மோடி வகிக்கும் பிரதமர் பதவிக்கு அழகல்ல. மெட்ரோ ரயில் திட்டத்தின் மீது அவ்வளவு அக்கறை கொண்ட பிரதமர் மோடி, சென்னையின் இரண்டாம் கட்ட மெட்ரோ ரயில் பணிகளுக்கு இதுவரை ஒரு ரூபாய் கூட ஒதுக்காதது ஏன்? ஒன்றிய மற்றும் மாநில கூட்டுப் பங்களிப்பில் இத்திட்டம் மேற்கொள்ளப்படுகிறது. இத்திட்டத்தின் மொத்த மதிப்பீடு ரூ.61,843 கோடி. இதுவரை தமிழ்நாடு அரசு நிதியில் இருந்து மட்டுமே பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. எனவே மெட்ரோ ரயில் திட்டத்தின் மீது பிரதமர் மோடிக்கு அக்கறை இல்லை. ஆனால் ‘திராவிட மாடல்’ ஆட்சியின் அடையாளங்களுள் ஒன்றாகத் திகழ்கிற கட்டணமில்லா பேருந்துப் பயணத் திட்டத்தையும், அதைப் பயன்படுத்தும் உழைக்கும் பெண்களையும் சிறுமைப்படுத்தும் நோக்கத்தோடே பிரதமர் மோடி இவ்வாறு பேசியிருக்கிறார்.

“பெண்கள் வீட்டை விட்டு வெளியே வரக்கூடாது, படிக்கச் செல்லக்கூடாது,வேலைக்குச் செல்லக்கூடாது” என்ற சனாதனக் கோட்பாட்டுக்கு நேரெதிராக, பெண்கள் நகரங்களை நோக்கி படிக்கவும், வேலைக்கும் செல்லத் தூண்டுவதாகவும் கட்டணமில்லா பேருந்துப் பயணம் திட்டம் அமைந்திருக்கிறது. தமிழ்நாட்டில் திமுக அரசு செயல்படுத்தியிருக்கும் இத்திட்டத்தை தற்போது மற்ற பல மாநிலங்களும் செயல்படுத்தத் தொடங்கிவிட்டன. திக்கெட்டும் ‘திராவிட மாடல்’ திட்டங்கள் பரவுகின்றன என்ற கோபமும்கூட இதற்குக் காரணமாக இருக்கக்கூடும். அதேசமயம், கட்டணமில்லா பேருந்துப் பயணத் திட்டத்தால் இழப்பு ஏற்படுகிறது என்றால், கடந்த 10 ஆண்டுகளில் பெரு நிறுவனங்களின் 25 லட்சம் கோடி ரூபாய் வாராக்கடனை வங்கிகள் தள்ளுபடி செய்திருக்கின்றன. இதில் பொதுத்துறை வங்கிகள் மட்டுமே 10 லட்சம் கோடி ரூபாய்க்கு மேல் தள்ளுபடி செய்திருக்கின்றன. அவை இழப்பு இல்லையா? அந்த வாராக்கடன்களை வசூலித்துக் காட்டுவோம் என்று இதுவரை பிரதமர் மோடி எங்காவது பேசியிருக்கிறாரா?

பிற்படுத்தப்பட்ட மற்றும் தாழ்த்தப்பட்ட சமூகங்களைச் சேர்ந்த பெண்கள், பயனடைவது மட்டும் ஏன் மோடியின் கண்களை உறுத்துகின்றன? ஒருவேளை இதிலும் உயர்ஜாதி ஏழைகளுக்கு சிறப்புச் சலுகைகள் வழங்கப்பட்டால் ஏற்றுக்கொள்வாரா என்று பாஜகவினர்களிடம் கேள்வி எழுப்ப வேண்டியுள்ளது.



# யானையின் மதம்

தெருவில் யானை வருகிறது என்றால் அவ்வளவுதான் உற்சாகம் கரைபுரண்டு ஓடும். ஆண், பெண் அனைவரும் வீதிக்கு ஓடிவந்துவிடுவார்கள். யானை மணியோசையுடன் நடந்து செல்லும் அழகே அழகு. அந்த கம்பீரமான யானைகள் இப்போது வாழ்வுரிமைக்கு போராடுகிறதே சார் என்றார் நண்பர் ஒருவர்...

உண்மைதான், போர்க்களத்தில் நின்ற யானைகள் இப்போது வாழ்விடங்களை பறிகொடுத்து நிற்கின்றன. கூட்டம் கூட்டமாக சென்று இனப்பெருக்கம் செய்ய வேண்டிய யானைகள் ஏன் பாதைத் தடுமாறுகின்றன. அதற்கு மனிதர்களின் ஆக்கிரமிப்புகள் தான் காரணம்.

இந்தியா முழுவதும் 150 யானை வழித்தடங்கள் இருப்பதாகவும், அதிகபட்சமாக மேற்கு வங்காளத்தில் 26 வழித்தடங்கள் இருப்பதாகவும் கடந்த ஆண்டு ஒன்றிய அரசு அறிவித்தது. ஆனால் தமிழ்நாடு அரசின் வனத்துறை தமிழ்நாட்டில் மொத்தம் 42 வழித்தடங்கள் இருப்பதைக் கண்டறிந்து அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. பாதிக்கும் மேற்பட்ட யானை வழித்தடங்களை கண்டறியாமல் போய்விட்டதா? என்று தெரியவில்லை.

யானைகள் இயற்கையோடு இணைந்தே வாழ்கின்றன. இரத்த அழுத்தம், மன அழுத்தம், கொரோனா, டைபாய்டு, புற்றுநோய் போன்ற பிரச்சனைகள் எல்லாம் அதற்கு இல்லை. பாவம் யானை, அதற்கு மதம் தெரியாது, லவ் ஜிகாத் புரியாது, சனாதனம், பாகிஸ்தான், இஸ்லாமியர்கள் என்பதெல்லாம் அதன் மண்டைக்குள் நுழையவே இல்லை. பாகன் இந்துவாகவே இருந்தாலும் தன்னை சித்ரவதை செய்தால் காலால் எங்கவுண்டரில் போட்டுத்தள்ளிவிடும்.

இப்போது தெற்கப்பா..! யானை புராணம் என்று கேட்க தோன்றுகிறதா? காரணம் இருக்கிறது. யானையின் வழித்தட உரிமைகளை மனிதக் கூட்டம் ஆக்கிரமித்துவிட்டதால் யானைகளுக்கும் மனிதர்களுக்கும் நடக்கும் மோதல் தொடர்கதையாகிவிட்டது. யானையின் வாழ்க்கையில் மனித குறுக்கீடுகள் அதிகரித்துக்கொண்டே வருகிறது.

மதத்திற்குள் யானையை இழுத்து வந்தவன் மனிதன் தான். கோயிலில் கூட்டம் சேர்ப்பதற்காக அதைக் காட்சிப் பொருளாக்கினான். அதன் நெற்றியில் விபூதி, நாமம் போட்டான். நாமத்தில் வடகலையா? தென்கலையா? என்று நீதிமன்றம் வரை சென்று வழக்காடினான். பக்தர்களுக்கு தும்பிக்கையை தூக்கி ஆசி வழங்க பயிற்சி கொடுத்தான். விநாயகக் கடவுளின் தலையில் சின்னமாகவே பொருத்தினான். மோடியைக் கேட்டால் அந்தக் காலத்தில் நடந்த பிளாஸ்டிக் சர்ஜரி என்று கூறுவார். ஆமாம், மயக்க மருந்து, ஆண்டி பயோடிக், டாக்டர்கள், மருத்துவ உபகரணங்கள் எதுவும் இல்லாமலேயே இந்த அறுவை சிகிச்சை வெற்றிகரமாக நடந்து முடிந்திருக்கிறது என்று அவர்கள் சொன்னால் நாம் நம்பித்தான் ஆகவேண்டும். அறிவுப்பூர்வமாக கேள்விக்கேட்டால் நாம் பாகிஸ்தான் ஏஜெண்டுகள் ஆகிவிடுவோம்.

யானையை அய்யப்பன் ஊர்வலங்களில் ரோடு ஷோவாக பயன்படுத்தினார்கள். ஒருமுறை யானைக்கு உணர்வுகள் அதிகமாகி பக்தர்களை தாக்கத் தொடங்கியது. பின்னர் காவல்துறை பக்தி ரோடு ஷோக்களில் யானைகளை பயன்படுத்துவதற்கு தடை விதித்தது. மனிதர்களின் மூளை முறையாக செயல்படாத போது அவர்களுக்கு இந்த சமூகம் பைத்தியம் என்று பெயர் சூட்டியது. ஆனால் யானை இதே பாதிப்புக்குள்ளானால் பைத்தியம் என்று அழைக்கக்கூடாது என்று நமது பழந்தமிழர்கள் அழகான தமிழ்ச்சொல்லை இந்த தமிழ் கூறும் நல் உலகிற்கு தந்துச்சென்றுள்ளனர். அவர்கள் தந்த பெயர் ‘மதம்’. அதற்காக அவர்களுக்கு நோபல் பரிசையே வழங்கலாம். யானையை மதத்திற்குள் கொண்டுவந்து மதம் பிடிக்கச் செய்த மனிதர்கள் தான் அதன் வழித்தடத்தை பட்டா போடத் தொடங்கியிருக்கிறார்கள்.

‘ஈஷா என்ற பன்னாட்டு ஆன்மீக டிரேடிங் சென்டர்’ ஒன்று, கோவைக்கு அருகே உள்ள ஒரு அடர்ந்த வனப்பகுதியை ஆக்கிரமித்து அங்கு சிவனின் பெயரால் கும்மாளம் அடிக்கிறது. இந்த ஆன்மீகத்திற்கு சிவனின் சக்தி தான் தெரியுமே தவிர யானையின் வலி தெரியாது என்று அடித்துக்கூறுகிறார் ஒரு சுற்றுச்சூழல் நல விரும்பி.

> யானைகள் ஏன் இடம்பெயர்ந்து கொண்டே இருப்பதற்கு அறிவியல் காரணம் ஒன்று உள்ளது. ஒரே மரபு இனத்துக்குள் அவைகள் இனப்பெருக்கம் செய்வது இல்லை. அப்படி நடந்தால் யானை இனமே அழிந்துவிடும். எனவே மாற்று மரபினங்களை தேடி அவை பயணித்து வருகின்றன என்று அறிவியல் கூறுகிறது.

வேறு ஜாதியினரை திருமணம் செய்தால் வெட்டிவிடுவேன் என்று அரிவாளை தூக்கும் ஆறறிவு மனிதர்கள், இந்த யானைகளை பார்த்தாவது திருந்துவார்களா என்று கேட்கிறார் ஒரு பெரியாரிஸ்ட். கேள்வி நியாயமானது தான். யானைக்கும் மதம் பிடிக்கக் கூடாது. மதம் பிடிக்காமல் இருக்க வேண்டுமானால் அதன் வாழ்விடங்களை, வழித்தடங்களை ஆக்கிரமிப்பு செய்யக்கூடாது. மனிதர்களுக்கும் மதம் பிடித்துவிடக் கூடாது. அப்படி மதம் பிடித்துவிட்டால் அவ்வளவுதான் ராம பகவான், இஸ்லாமியர், பாகிஸ்தான், தாலி பறிப்பு, புல்டோசர்கள், எருமை மாடு, இளவரசர் என்றெல்லாம் கூச்சல் போடத் தொடங்கிவிடுவார்கள்.

அதனாலே **‘மதம் எனும் பேய் பிடிக்காமல் இருக்கட்டும்’** என்றார் வள்ளலார். அது பிரதமர் உட்பட, அனைத்து உயிர்களுக்கும் தான்..

**கோடங்குடி மாரிமுத்து**

# சமூகப் போக்கைப் புரட்டிப்போட்ட ‘குடிஅரசு’

## 100 ஆண்டுகள் ஆகியும் அடங்காத அதிர்வலைகள்

க. இரவிபாரதி

**(சென்னை மயிலாப்பூரில் உள்ள கழகத் தலைமை அலுவலகத்தில், 19.05.2024 அன்று நடைபெற்ற நிமிர்வோம் வாசகர் வட்டத்தின் 21–வது சந்திப்பில், காஞ்சிபுரம் மாவட்டக் கழக அமைப்பாளர் தோழர் இரவிபாரதி ‘தமிழ்ச் சூழலில் குடிஅரசு ஏற்படுத்திய அதிர்வலைகள்’ என்னும் தலைப்பில் ஆற்றிய உரை)**

“நானே அச்சுக்கோர்த்து, நானே அச்சிட்டு, நானே படித்துக் கொள்ளும் நிலைக்குப் போனாலும் பத்திரிகை நடத்துவதை நிறுத்த மாட்டேன், ‘குடிஅரசை’ தொடர்ந்து வெளியிட்டு வருவேன். என் கருத்துக்களை எதிர்வரும் தலைமுறைகளுக்கு விட்டுச் செல்ல வேண்டியது எனது கடமை” என்ற காத்திரமான எழுத்துக்களுடன் இதழியல் களத்திற்கு வந்தவர் பெரியார்.

லோகோபகாரி, தேசோபகாரி, தேசபிமானி, ஜனாநுகூலன், சுதேச அபிமானி’, சுதேசமித்திரன், மஹாராணி’, கலாதரங்கிணி இதெல்லாம் அந்தக் காலத்தில் வெளிவந்த பத்திரிகைகளின் பெயர்கள். இந்தப் பெயர்கள் எளிதில் உச்சரிக்கக்கூடியதாக இல்லை. பத்திரிகைகள் தமிழில் வந்தன, ஆனால் அதன் பெயர்கள் தமிழில் இல்லை. காரணம் அப்போது மேட்டுக்குடிகளிடம் மட்டுமே இதழியல் இருந்தது.

தமிழ் குடிகளுக்காக இதழ் நடத்த வேண்டும் என்ற எண்ணம் பெரியார் மனதில் நெடுங்காலமாக கனன்று கொண்டிருந்தது. 1924ல் கேரளாவில் வைக்கம் என்ற ஊரில், கோவில் இருக்கும் தெருவில் உழைக்கும் மக்கள் நடக்க திருவிதாங்கூர் அரசு தடை செய்திருந்த தீண்டாமை கொடுமையை எதிர்த்துப் போராடியதால் பெரியார் சிறையில் அடைக்கப்பட்டிருந்தார். சிறையில் இருந்த போதுகூட பத்திரிகை நடத்த வேண்டும் என்ற எண்ண ஓட்டமே பெரியாரிடம் மேலோங்கி இருந்தது. வெளியே வந்த முதல் வேலையாக, பல நாட்களாக மனதில் உருத்திக் கொண்டிருந்த எண்ணத்திற்கு செயல்வடிவம் கொடுத்தார்.

ஆம், இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் தமிழ்ச் சமூக, அரசியல், இதழியல் வரலாற்றில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்திய மூடநம்பிக்கை ஒழிப்பு, சாதிமறுப்பு, மத மறுப்பு, இன இழிவு நீக்கம், பெண் விடுதலை, சமூக சீர்திருத்தம், சுயமரியாதை, பகுத்தறிவு. பின்னாளில் இறைமறுப்பு, ஆதிக்க எதிர்ப்பு போன்ற சமத்துவ சமூக விடுதலைக் கொள்கைகளை அடிநாதமாகக் கொண்டு வரலாற்று சிறப்புமிக்க கொள்கை ஏடான ‘குடிஅரசு’ இதழை பெரியார் 02-05-1925-இல் தொடங்கினார்.

### ஆரியத்தை அலறவைத்த ‘குடிஅரசு’


குடி அரசு இதழின் நோக்கம் குறித்து முதல் இதழில் இப்படி எழுதினார். “நாட்டு மக்களின் உடல் வளர்ச்சிக்காவும், அறிவு வளர்ச்சிக்காகவும், கலை வளர்ச்சிக்காவும், மொழி வளர்ச்சிக்காவும் இதன்மூலம் உழைத்துவருவோம். ஒவ்வொரு வகுப்பும் முன்னேற வேண்டும். இதை அறவே விடுத்துத் ‘தேசம், தேசம்’ என்று கூக்குரலிடுவது எமது பத்திரிகையின் நோக்கமன்று. மக்களுள் தன்மதிப்பும் சமத்துவமும் சகோதரத்துவமும் ஓங்கிவளரல் வேண்டும். மக்கள் அனைவரும் அன்பின் மயமாதல் வேண்டும்” என்று இதழின் நோக்கம் குறித்து தெளிவுபடுத்தினார்.

ஞாயிறுதோறும் வார இதழாக ‘குடிஅரசு’ வெளிவந்தது. ஆண்டு சந்தா 3 ரூபாய், மாத சந்தா 1 ரூபாய் 12 அணா, வெளிநாட்டு சந்தா 4 ரூபாய், திராவிட சங்கங்களுக்கு பாதி சந்தா என நிர்ணயித்து குடிஅரசு தனது பயணத்தை தொடங்கியது.

தமிழ் பத்தரிகை உலகம் இதற்கு முன் கேள்விப்படாத காத்திரமான சொற்களுடன் இதழியல் உலகில் செயற்கரிய செயல்களைச் செய்ய பெரியார் குடிஅரசை தொடங்கினார். தொடக்கத்தில் தனது நண்பர் வ.மு. தங்கபெருமாள் பிள்ளையுடன் இதழின் ஆசிரியர் பணியை பகிர்ந்து கொண்டார். இரண்டாம் ஆண்டில் தங்கபெருமாள் பிள்ளை பிணியால் அவதியுற 26.7.1925ஆம் நாளிட்ட இதழிலிருந்து அவரது பெயர் நீக்கப்பட்டு, ஈ.வெ.இராமசாமி நாயக்கர் என்னும் பெயரே ஆசிரியரெனக் குறிக்கப்பட்டது.

25.12.1927ஆம் நாளிட்ட இதழிலிருந்து ஆசிரியர் பெயரில் இருந்த சாதிப்பெயர் நீக்கப்பட்டு ஈ.வெ. இராமசாமி என்று குறிப்பிடப்பட்டது. பெரியார் ஒரு பெரும் அறிஞர் படையை குடிஅரசில் எழுத வைத்தார். கைவல்ய சாமி, சந்திரசேகரப் பாவலர், ஈழத்துச் சிவானந்த அடிகள், சாமி சிதம்பரனார், பண்டித முத்துச்சாமி, கே.எம். பாலசுப்பிரமணியம், மா.சிங்காரவேலர், சீனி. வேங்கடசாமி முதலிய புலவர்களையும், ஆய்வுத்திறன் படைத்த கோவை அய்யாமுத்து, ஜனக சங்கர கண்ணப்பர், சா. குருசாமி, ப. ஜீவானந்தம் முதலிய அறிஞர்களின் முற்போக்குக் கட்டுரைகளையும் தாங்கி வந்தது குடிஅரசு. அத்தோடு பாரதிதாசன், எம்.ஆர். மத்திரள், ஜீவானந்தம் ஆகியோரின் உணர்ச்சிப் பாக்களையும் பெற்று வெளியிட்டார்.





அறைகூவலாய் அமைந்த அவர்களின் படைப்புகள் ஆரிய வைதீகம் கோலோச்சிய அந்த காலத்தை அலற வைத்தன; தேசியங்களைத் திணறடித்தன. விளைவு, அன்றைக்கு முன்னணி பத்திரிகையாகத் திகழ்ந்த சுதேசமித்திரன் 2000 சந்தாதாரர்களை இழந்தது என்று, அன்றைய ‘திராவிடன்’ நாளிதழ் 07-05-1927-இல் எழுதியது. குடிஅரசின் விற்பனை வாரந்தோறும் 16,000 பிரதிகள் என்ற அளவில் அதிகரித்தது என்று குறிப்புகள் சொல்கின்றன.

> **“என்னை நீங்கள் முடக்க நினைத்தால் பெயரை மாற்றுவேன், இடத்தை மாற்றுவேன், ஆனால் ஒருபோதும் பத்திரிகை நடத்துவதை நிறுத்த மாட்டேன்”**

### குடிஅரசின் கண்ணியம்

3.09.1925 அன்று ஆந்திர மாநிலம் காக்கிநாடாவில் நடைபெற்ற பாலியல் தொழிலாளிகள் கூட்டத்தை மிக கண்ணியத்துடன் ‘தேவதாசிகள் மாநாடு’ என்று தலைப்பிட்டு செய்தி வெளியிட்டது குடிஅரசு பத்திரிகை. பாதிக்கப்பட்ட பெண்கள் அந்த மாநாட்டில் வைத்த கோரிக்கை, இனி இந்தத் தொழிலில் பெண் குழந்தைகளை ஈடுபடுத்த மாட்டோம் என அவர்கள் ஏற்ற உறுதிமொழியை, அதன் முக்கியத்துவம் கருதி பொது சமூகத்தின் கவனத்திற்கு செய்தியாகக் கொண்டு போய் சேர்தது குடிஅரசு ஏடு.

02-02-1929-இல் தேவதாசி முறை ஒழிப்பு மசோதாவை சட்டமன்றத்தில் தாக்கல் செய்தார் முத்துலட்சுமி ரெட்டி. பழமைவாதிகள் அப்போது அந்த மசோதாவை கடுமையாக எதிர்த்தனர். ஆட்சியில் இருந்த நீதிக்கட்சியை விமர்சித்து ஒரு தலையங்கத்தை தீட்டினார் பெரியார். திருமதி டாக்டர் முத்துலட்சுமி அம்மையார் அவர்களால் சென்னை சட்டசபைக்கு அனுப்பப்பட்டிருக்கும், பொட்டுக் கட்டுவதை ஒழிக்கும்’ இந்த மசோதாவானது வெகுகாலமாகவே மக்கள் பிரதிநிகள் என்பவர்களால் பொதுக்கூட்டங்களிலும், பொது மகாநாடுகளிலும், கண்டித்துப் பேசப்பட்டதுடன், இது மாதிரி ஒரு சட்டம் செய்ய வேண்டுமென்று இந்திய சட்டசபைக் கூட்டங்களிலும் அடிக்கடி விவாதிக்கப்பட்டும் வந்திருக்கின்றது.

எப்படியாவது அடுத்த சட்டசபைக் கூட்டத்திலாவது இச்சட்டம் நிறைவேறாமல் போகுமானால், சர்க்காரின் யோக்கியதையிலும், ஜஸ்டிஸ் கட்சியாரின் சுயமரியாதையிலும் தெருவில் போகின்றவனுக்குக்கூட மதிப்பும் நம்பிக்கையும் ‘இருக்காதென்றே சொல்வோம்” என்று காட்டமாக எழுதினார். பெரியார் நீதிக்கட்சியின் ஆதரவாளர்தான், ஆனால் அது தனது பாதையில் இருந்து விலகிப் போகும் போது அதைக் கண்டிக்கவும் அவர் தயங்கவில்லை. அப்பன் வெட்டிய கிணறு என்பதற்காக உப்புநீரை மெச்சிக் கொள்ளவில்லை. இந்த தலையங்கம் வெளியான சில மாதங்களிலேயே, 1930-இல் தேவதாசிகள் ஒழிப்பு சட்டம் சென்னை மாகாண சட்டசபையில் நிறைவேறியது.

### எதிரிகளும் தவிர்க்க முடியாது!

20-01-1935 இதழிலிருந்து தமிழ்மொழி எழுத்துச் சீர்திருத்தத்தை நடைமுறைப்படுத்தினார் பெரியார். அந்த இதழின் தலையங்கத்தில் இப்படி எழுதினார்:

“தமிழ் பாஷை எழுத்துக்கள் விஷயமாய் பல சீர்திருத்தங்கள் செய்யப்பட வேண்டும் என்பது அனேகருக்கு வெகு காலத்துக்கு முன்பிருந்தே ஏற்பட்டிருந்த அபிப்பிராயமாக இருந்தாலும் எவரும் தைரியமாய் முன்வராமலே இருக்கிறார்கள் “இவ்வளவு பெரிய காரியத்திற்கு பாஷா ஞானம், இலக்கண ஞானம், பொதுக் கல்வி இல்லாத ஒரு சாதாரண மனிதன் முயற்சிக்கலாமா என்பது ஒரு பெரிய கேள்வியாக இருக்கலாம். அது உண்மையாகவும் இருக்கலாம், ஆனால் தகுந்த புலமையும், பாஷா ஞானமும், இலக்கண அறிவும் உள்ள எவரும் முயற்சிக்காவிட்டால் என்ன செய்வது? தவம் செய்வதா? அல்லது ஜெபம் செய்வதா?” என்று கேள்வி கேட்டு துணிச்சலாக எழுத்து சீர்திருத்தத்தை மேற்கொண்டார் பெரியார்.

பெரியார் எழுத்துச் சீர்திருத்தத்தை தொடங்கியபோது அதை எதிர்த்து, விமர்சித்தவர்கள் இன்று பெரியாரின் எழுத்துச் சீர்திருத்தத்தையே பயன்படுத்தி வருகிறார்கள்.

“பெண்கள் பிள்ளை பெறும் எந்திரங்கள் அல்ல; அவர்களின் முன்னேற்றத்திற்கு பெரும் தடையே அவர்கள் பிள்ளை பெறுவது தான்! ஆகவே அதனை கொஞ்ச காலத்திற்கு தள்ளி வைக்க வேண்டும். மத சம்பிரதாயமோ, கடவுள் சம்பிரதாயமோ, புராண சம்பிரதாயமோ, எது பெண் விடுதலைக்கு விரோதமாக இருந்தாலும் அது ஒழிக்கப்பட வேண்டியதுதான்” என்று எழுதி தமிழ்நாட்டில் அதிர்வை ஏற்படுத்தியது குடிஅரசு.

### குடிஅரசு மீது வழக்கு

29-10-1933 அன்று இன்றைய ஆட்சி ஒழிய வேண்டும் ஏன்? என்று தலையங்கம் எழுதியதற்காக ராஜதுரோக குற்றம் சாட்டப்பட்டு பெரியார் கைது செய்யப்பட்டார். அவருக்கு 300 ரூபாய் தண்டமும், மூன்று மாதம் வெறுங்காவல் தண்டனையும் விதிக்கப்பட்டது.

குடிஅரசின் வெளியிட்டாளரான பெரியாரின் தங்கை கண்ணம்மாவையும் கைது செய்து சிறையில் அடைத்தனர். ‘குடிஅரசு’ தடுக்கப்பட்டால் புரட்சி வருவதை யாராலும் தடுக்க முடியாது என்று ‘புரட்சி’ என்ற பத்திரிகை தொடங்கினார். பகுத்தறிவு என்ற இதழையும் தொடங்கினார். அதாவது என்னை நீங்கள் முடக்க நினைத்தால் பெயரை மாற்றுவேன், இடத்தை மாற்றுவேன், ஆனால் ஒருபோதும் பத்திரிகை நடத்துவதை நிறுத்த மாட்டேன் என்றார் பெரியார்.

**வாழ்க ‘குடிஅரசு’**

date of publication - every thursday tamil weekly Reg.No.tn/cc(S)Dn/459/22-24 licenced to post wpp no.tn/PMG(ccR)/WPP-462/22-24
puratchi periyar muzhakkam registered with the registrar of newspaper for india under no.tntam/2002/07776

## அமலாக்கத்துறைக்கு கடும் கட்டுப்பாடு

கடந்த 10 ஆண்டுகளில் சட்டவிரோத பணப் பரிமாற்ற தடை சட்டத்தில் பிரதமர் மோடி தலைமையிலான ஒன்றிய அரசு பல்வேறு திருத்தங்களை செய்திருக்கிறது. பணமோசடியின் வரையறை மாற்றப்பட்டது. பிரிவு 19-இன் கீழ் அமலாக்கத்துறைக்கு கைது செய்வதற்கு கூடுதல் அதிகாரம் வழங்கப்பட்டது. இந்த சட்டத் திருத்தத்துக்கு பிறகு சட்ட விரோத பணப்பரிமாற்றத் தடை சட்டம் ஆளும் கட்சிக்கு வேண்டாத எதிர்க்கட்சியினர், தொழிலதிபர்கள் மீது அதிகம் பாய்ந்திருக்கிறது. இந்த நிலையில், சட்டவிரோத பண பரிமாற்ற சட்டத்தின் கீழ் ஒருவரை கைது செய்ய அமலாக்கத்துறைக்கு உச்ச நீதிமன்றம் அதிரடியாக கட்டுப்பாடுகளை விதித்துள்ளது.

சட்டவிரோத பணப் பரிமாற்ற சட்டத்தின் கீழ் தொடரப்பட்ட வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர், அந்த சட்டத்தின் பிரிவு 45ன் கீழ் ஜாமீன் பெறுவதற்கான இரட்டை நிபந்தனைகள் என்பது பொருந்தக் கூடியதா என்று தெரிவிக்க வேண்டும் என்று ஜலந்தரை சேர்ந்த தர்சம் லால் என்பவர் உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனுவில் இத்தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. “ஜாமீன் பெறுவதற்கு சட்டவிரோத பண பரிமாற்ற சட்டத்தின் பிரிவு 45ன் இரட்டை நிபந்தனைகள் பொருந்தாது. இதில் சம்மனைப் பின்பற்றி நீதிமன்றத்தில் ஆஜரான குற்றம்சாட்டப்பட்டவர்கள், ஜாமீனுக்கு விண்ணப்பிக்க வேண்டிய அவசியமில்லை. வழக்குத் தொடர்பான ஆவணங்களை சிறப்பு நீதிமன்றம் ஆராய்ந்து அது விசாரணைக்கு உகந்தது என்று எடுத்துக் கொண்ட பிறகு பிரிவு 19-இன் கீழ் அதிகாரத்தை பயன்படுத்தி குற்றவாளியை அமலாக்கத் துறை கைது செய்ய முடியாது. எனவே தான் சட்ட விதி 45ன் இரட்டை நிபந்தனைகள் பொருந்தாது என்பது மட்டுமில்லாமல் தேவையில்லாத ஒன்றாகும். இதில் ஒருவேளை குற்றம் சாட்டப்பட்டவரை அமலாக்கத்துறை காவலில் வைக்க விரும்பினால் அவர்கள் சிறப்பு நீதிமன்றத்தில் விண்ணப்பிக்க வேண்டும். அப்படி இல்லையென்றால் எந்த ஒரு அதிகாரத்தையும் அமலாக்கத்துறை மேற்கொள்ள முடியாது.

சட்டவிரோத பண பரிமாற்ற சட்டத்தின் விதி 44 (1) (பி)யின்கீழ் தாக்கல் செய்யப்பட்ட புகார் குற்றவியல் நடைமுறை சட்டத்தின் கீழ் நிர்வகிக்கப்படும். எனவே குற்றம் சாட்டப்பட்டவர் ஏற்கனவே கைது செய்யப்படாமல் இருந்தால், விசாரணைக்குத்தான் அவர் வரவழைக்கப்படுவாரே தவிர அது கைது நடவடிக்கையாக இருக்காது. குற்றம் சாட்டப்பட்ட நபர் அதனை செய்திருப்பதற்கான வாய்ப்பில்லை என்றும், ஜாமீனில் வெளி வந்தால் அவர் மேலும் குற்றங்களை செய்ய மாட்டார் என்றும் திருப்தி ஏற்பட்டால் மட்டுமே சிறப்பு விசாரணை நீதிமன்றம் குற்றம் சாட்டப்பட்டவருக்கு ஜாமீன் வழங்க வேண்டும்.

ஆனால் ஒருவர் நீதிமன்றத்தின் சம்மன்களுக்கு ஆஜராகி இருந்தால் சட்ட விதி 45ன் இரட்டை நிபந்தனைகளை கருத்தில் கொள்ளத் தேவையில்லை. மேலும் இந்த விவகாரத்தில் நீதிமன்ற விசாரணையில் உள்ள வழக்கில் விசாரணை நீதிமன்றத்தின் உத்தரவுகள் எதுவும் இல்லாமல், அமலாக்கத்துறை யாரையும் கைது செய்யக் கூடாது. அதேபோன்று சம்மன் மூலம் குற்றம்சாட்டப்பட்டவர் சிறப்பு நீதிமன்றத்தில் ஆஜராகி இருந்தால், அவர் காவலில் இருப்பதாகக் கருத முடியாது. எனவே குற்றம் சாட்டப்பட்டவர்கள் ஜாமீன்கோரி விண்ணப்பிக்க வேண்டிய அவசியம் இல்லை. இருப்பினும் குற்றவியல் நடைமுறை சட்டத்தின் 88-வது பிரிவின் படி குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு அதற்கான அறிக்கைகளை வழங்க சிறப்பு நீதிமன்றம் அறிவுறுத்தலாம்” என்று நீதிபதிகள் தெரிவித்துள்ளனர்.

## தோழர் விக்னேஷ் படத்திறப்பு நிகழ்ச்சி



மறைந்த கழக செயல்வீரர் தோழர் போரூர் விக்னேஷ் அவர்களின் படத்திறப்பு நிகழ்ச்சி 19.05.2024 அன்று கழகத் தலைமை அலுவலகத்தில், நிமிர்வோம் வாசகர் வட்டத்தின் 21வது சந்திப்பில் நடைபெற்றது.

வட சென்னை மாவட்டக் கழக அமைப்பாளர் சேத்துப்பட்டு இராசேந்திரன் விக்னேஷ் படத்தை திறந்துவைத்து மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

உடன் மாவட்டச் செயலாளர் இரா.உமாபதி, கழக இணையதளப் பொறுப்பாளர் விஜயகுமார், மடிப்பாக்கம் பகுதிக் கழகச் செயலாளர் எட்வின் பிரபாகரன்.

## கழகத்தில் இணைத்துக்கொண்ட பெரம்பூர் விஷால்



பெரம்பூர் விஷால், கழகத்தின் செயல்பாடுகளை இணையம் வழியாக அறிந்து கழகத்தில் இணைய விருப்பப்பட்டு 19.05.2024 அன்று மயிலாப்பூர் தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற 21வது நிமிர்வோம் வாசகர் வட்ட சந்திப்பில் மாவட்டச் செயலாளர் இரா.உமாபதி தலைமையில் தன்னை கழகத்தில் இணைத்துக் கொண்டார். உடன் கழக இணையதளப் பொறுப்பாளர் விஜயகுமார், வட சென்னை அமைப்பாளர் சேத்துப்பட்டு இராசேந்திரன்.

## ‘நிமிர்வோம்’ வாசகர் வட்டத்தின் 21-வது சந்திப்பு



“குடிஅரசு இதழ் மற்றும் சுயமரியாதை இயக்க நூற்றாண்டு” விழாவை முன்னிட்டு நிமிர்வோம் வாசகர் வட்டத்தின் 21வது சந்திப்பு 19.05.2024 அன்று மயிலாப்பூரில் உள்ள திராவிடர் விடுதலைக் கழகத் தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது.

நிகழ்விற்கு அருண் கோமதி தலைமை தாங்கினார், சேத்துப்பட்டு இராசேந்திரன் வரவேற்புரையாற்றினார்.

நிகழ்வில் சிறப்பு அழைப்பார்களாக பங்கேற்ற ஊடகவியலாளர் சுகுணா திவாகர் ‘தமிழ்நாட்டின் சுடரொளி சுயமரியாதை இயக்கம்’ என்ற தலைப்பிலும், காஞ்சிபுரம் மாவட்டக் கழக அமைப்பாளர் இரவிபாரதி ‘தமிழ்ச்சூழலில் குடிஅரசு ஏற்படுத்திய அதிர்வலைகள்’ என்ற தலைப்பிலும் சிறப்புரையாற்றினார்கள்.

காவை அஜித் நன்றி கூற கூட்டம் நிறைவுபெற்றது.

இந்நிகழ்வில் கழகத் தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன், ஆய்வாளர் பழ.அதியமான், மாவட்டச் செயலாளர் உமாபதி, கழக இணையதளப் பொறுப்பாளர் விஜயகுமார் உள்ளிட்ட ஐம்பதுக்கும் மேற்பட்ட தோழர்கள் பங்கேற்றனர்.

## பெரியார் முழக்க வளர்ச்சி நிதி!

- சேலம் கிழக்கு மாவட்டக் கழக அமைப்பாளர் ஏற்காடு பெருமாளின் மகன் ஈழப் பிரபாகரன் பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வில் 402/500 மதிப்பெண்களை பெற்று தேர்ச்சிடைந்திருக்கிறார்.

அதன் மகிழ்வாக கழக வார ஏடான “புரட்சிப் பெரியார் முழக்கம்” இதழுக்கு ரூ.5,000/- நன்கொடை வழங்கியுள்ளார் ஏற்காடு பெருமாள்.

- கடந்த ஆண்டில் கழகம் நடத்திய “இது தமிழ்நாடு! இளம் தலைமுறையின் எச்சரிக்கை” மாநாட்டில் “ஜாதி மறுப்பு திருமணம்” செய்துகொண்ட ஊடகவியலாளர்கள் காயத்ரி – எழிலரசன் இணையருக்கு பெண் குழந்தை பிறந்ததன் மகிழ்வாக, புரட்சிப் பெரியார் முழக்கத்திற்கு ரூ.1,000/- வளர்ச்சி நிதி வழங்கியுள்ளனர்.

- வெங்கடேசன், கோவை மாநகரச் செயலாளர் – ரூ.1,000/-
- அழகர், மதுரை – ரூ.1,000/-
- பெரியார்புக்ஸ்.காம் – ரூ.2000/-

மேலும் நன்கொடை மற்றும் சந்தா செலுத்த விரும்புவோர் QR Code-யை பயன்படுத்தி தொகையை செலுத்தலாம்.

UPI ID: viduthalaikr@oksbi

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP
Posted May 24, 2024

owner and publisher by : k. rajendran, from 29, Journalists colony, thiruvalluvar nagar, thiruvanmiyur, chennai - 600 041.
and printed by : S. Theesmas, at lilly soosai offset, new no.8, old No.12/1, mohammed usain lane, royapettah, chennai - 600 014.
editor ; k. rajendran